# மாலைக்கதிர்
Maalaikkathir








சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 29 வியாழக்கிழமை 16.05.2024 கதிர் 259


# ரதுபஸ்வல - வெலிவேரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ வழக்கு இராணுவ மேஜர் உட்பட நான்கு சந்தேக நபர்களும் விடுதலை!

## கம்பஹா மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது

**கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரிய, ரதுபஸ்வல பிரதேச மக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் போது மூவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் இராணுவ மேஜர் உட்பட நான்கு சந்தேக நபர்களை விடுதலை செய்து கம்பஹா மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.**

**கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரிய, ரதுபஸ்வல பிரதேச மக்கள் சுத்தமான குடிநீரை வழங்குமாறு கோரி அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 3 பொதுமக்கள் உயிரிழந்து, 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.**

2➤





# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிராக ஐந்து பேருக்கு விடுக்கப்பட்ட தடை உத்தரவு!

## நீதிமன்றினால் இன்று விலக்கிக் கொள்ளப்பட்டது!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிராக ஐவருக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு, இன்று சட்டத்தரணிகளின் வாதத்தையடுத்து கல்முனை நீதிமன்றத்தினால் விலக்கிக் கொள்ளப்பட்டது.

கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் இந்த வழக்கு மீள் நகர்த்தல் முறை மூலம் மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் நடராஜா சிவரஞ்சித், ரி.மதிவதனன், றிபாஸ் ஆகியோர் இதனை மீள் தாக்கல் செய்திருந்தனர். அதனை ஏற்ற நீதிவான் சம்சுதீன் நேற்று விசாரணை செய்து பரிசீலனைக்கு உட்படுத்தினார்.

பெரியநீலாவணை பொலிஸ்பொறுப்பதிகாரி வாதியாகப் பிரசன்னமாயிருந்தார்.

சட்டத்தரணிகளான நடராஜா சிவரங்சித் ரி.மதிவதனன் மற்றும் றிபாஸ் ஆகியோர் பிரதிவாதிகளின் சார்பில் வாதங்களை முன் வைத்தார்கள் .

அதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி சம்சுதீன் பொதுமக்களுக்கு எவ்வித

2➤

# ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி ஜூலை மாதத்தில் வெளியிடப்படவுள்ளது!


## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலுக்கான வர்த்தமானி எதிர்வரும் ஜூலை மாதம் வெளியிடப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். எனவே, விவசாயம் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இந்த வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் நடைமுறைப்படுத்த முடியாது எனத்தெரிவித்த அமைச்சர், ஜூலை மாதத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது எனவும்

2➤



# இங்கிலாந்தின் ‘கதீட்ரல் ஹோட்டலை’ இலங்கை நிறுவனம் வாங்கியுள்ளது

## எலிசபெத் மகாராணியும் அங்கு உணவருந்தியுள்ளாராம்

இலங்கையின் ‘தெடிகம’ குழுமத்திற்கு சொந்தமான ‘லெவன் டிஷ் லெஷர்’ நிறுவனம் இங்கிலாந்தின் ‘டெர்பி’ நகரிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க ‘கதீட்ரல் ஹோட்டலை’ கொள்வனவு செய்துள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரண்டாம் தர ஹோட்டலாக தரப்படுத்தப்பட்டுள்ள ‘கதீட்ரல் குவாட்டர் ஹோட்டல்’ ‘தெடிகம’ குழுமத்தின் உரிமையாளர் ரஷ்மி தெடிகம மற்றும் ‘லைவன்டிஷ்லெஷர்’ நிறுவனத்தின் பீட்டர் கெரோன் ஆகியோரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், கொள்வனவு விலை விபரங்கள் வெளியிடப்படவில்லை எனவும் பிரித்தானிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இரண்டாம் எலிசபெத் மகாராணியார் 2010 இல் வரலாற்று சிறப்புமிக்க இந்த ‘கதீட்ரல் ஹோட்டலில்’ உணவருந்தியிருந்தார். அதன்போது அவர்

2➤

# ரஷ்யப் படைகளுக்கு இலங்கையர்களை அனுப்பியதாக கூறப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமையாளர் கைது

ரஷ்யப் படைகளுக்கு இலங்கையர்களை அனுப்பியதாகக்கூறப்படும்நுகேகொடஸ்டான்லி திலகரத்ன மாவத்தையில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மதுஷான் தெரிவித்துள்ளார்.

அனுமதிப் பத்திரம் சகிதம் தொழிற்பட்டு வந்துள்ள இந்த நிறுவனத்தினர், சுற்றுலா விசா மூலம் ரஷ்ய ராணுவத்தின் சிவில் சேவைக்கு அனுப்புவதாக கூறி, ஒவ்வொரு ராணுவ வீரரிடமிருந்தும் தலா 15 லட்சம் ரூபாய் பணம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த வேலைவாய்ப்பு நிறுவனம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு 7 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அந்த முறைப்பாடுகளின் பிரகாரம் இந்த நிறுவனத்தினால் ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும்

2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## ரதுபஸ்வல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில்ஒரு தனியார்நிறுவனத்தின்நடவடிக்கையால் சுற்றுச்சூழல் மாசடைவதாகக் கூறி அதனை எதிர்த்து அப்பிரதேச மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களும் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக சட்டமா அதிபரால் கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது

இந்தச் சம்பவம் இடம்பெற்று சுமார் 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்று குறித்த நால்வரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறைச்சம்பவம்கடந்த 2013 ஆம்ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி இடம்பெற்றிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், துப்பாக்கிச் சூடு நடத்திய இராணுவ பிரிகேடியர் மற்றும் 3 இராணுவச் சிப்பாய்கள் சந்தேக நபர்களாக இனங்காணப்பட்டிருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தபோது, இன்றையதினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

11 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச் சம்பவம் இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத வன்முறைகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரினால் தொடரப்பட்ட இந்த வழக்கின் விசாரணைகள் நீண்டகாலமாக இடம்பெற்றிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற இந்தச் சம்பத்திற்கு முறையான தீர்வு வழங்கப்படவேண்டும் என, 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதேநேரம், இந்தச் சம்பவத்தின் போது உயிரிழந்தவர்கள், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளாதவர்கள் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்காத நிலையில் இராணுவம் அழைக்கப்பட்டு, பொதுமக்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இராணுவம் பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்ற 90 துப்பாக்கிகள், அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக கப்பட்டிருந்தது.

இதேவேளை தமது அறிவுறுத்தலுக்கு அமையவே வெலிவேரிய கலகம் இடம்பெற்ற பகுதிக்கு இராணுவத்தினரை பாதுகாப்பு அமைச்சு அனுப்பி வைத்ததாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (04)

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடைஞ்சலும் வராத வகையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பதாகைகளை, சின்னங்களை காட்சிப்படுத்தாமலும் தங்களது மரணித்த உயிர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை யாரும் தடை செய்ய முடியாது. இந்த வகையில் நியாயமாக இந்த நினைவேந்தலை செய்யலாம், என்று உத்தரவு பிறப்பித்தார்.

கல்முனை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை 15 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரையான காலப்பகுதியில் நடாத்துவதற்கு ஐவருக்கு எதிராக கல்முனை நீதிவான் நீதிமன்றினால் தடையுத்தரவு இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும்முன்னாள்தவிசாளருமானகிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சமுக செயற்பாட்டாளர்களான பாண்டிருப்பு தாமோதரம் பிரதீபன்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் , காரைதீவு வினாயகம் விமலநாதன் மற்றும் திருக்கோவில் த.செல்வராணி ஆகியோருக்கு இத் தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்திலும் இவ்வாறு விதிக்கப்பட்ட தடையுத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரிடமும் வாக்குமூலம் பதிவு செய்ததன் பின்னர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அவர்களை முன்னிலைப்படுத்தியதாகவும், அவர்களை மே மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் தெரிவித்துள்ள ஊடகப் பேச்சாளர் மதுஷான், சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ரெம-70)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார். அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் இவ்வருட ஆரம்பம் முதல் இது தொடர்பாக கூறப்பட்டு வந்த போதிலும், அநேகமான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் திருப்தியடைய முடியாத நிலை காணப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித் துள் ளார். (ரெம-68)

## இங்கிலாந்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உட்கொண்ட உணவுக்காக ஹோட்டலின் சமையல்காரரை பாராட்டி நன்றியும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஹோட்டலில் 38 படுக்கையறைகள் உள்ளதாகவும், இதற்கு முன்னர் அந்த ஹோட்டல் ஒரு காவல் நிலையமாக இருந்ததாகவும் பிரித்தானிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

'லெவண்டிஷ்லெஷர்' நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தில் கொள்வனவு செய்துள்ள இரண்டாவது ஹோட்டல் இது எனவும், 2005 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனம் இவ்வாறு 8 ஹோட்டல்களை கொள்வனவு செய்துள்ளதாகவும் பிரித்தானிய ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெம-69)

# அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

பொலிஸாரின் அச்சுறுத்தல் மற்றும் அடக்குமுறைகளுக்கு மத்தியில் ஐந்தாவது நாளாகவும் மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழின அழிப்பு வாரத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன.

பொலிஸார் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி, கஞ்சி பரிமாறுவதைத் தடுக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தபோதிலும் தொடர்ந்தும் கஞ்சி வழங்குவது நடைபெற்று வருகின்றது.

இன்று மட்டக்களப்பின் நுழைவாயிலான பிள்ளையாரடியில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது கொக்குவில் பொலிஸ் நிலைய பொறுப்பத்திகாரி தலைமையிலான பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன் கஞ்சி குடிப்பதற்காக வாகனங்களை நிறுத்தியவர்கள் அங்கிருந்து செல்லுமாறு பொலிஸாரினால் அச்சுறுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் செயற்பாட்டினைக் கண்டிக்கும் வகையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பொலிஸாருடன் முரண்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

# முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வாய்வு மீள ஆரம்பம்!

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுகள் ஜூலை 4 ஆம் திகதி மீள ஆரம்பமாகுமென முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று (16) விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, அகழ்வாய்வுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச்செயலகம் தெரிவித்துள்ள நிலையிலேயே, குறித்த மனிதப்புதைகுழி அகழ்வாய்வுப் பணிகளை மீள ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. (04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சர்வதேச குருதி அழுத்தத் தினத்தையொட்டி சாய்ந்தமருதில் விசேட பரிசோதனை நிகழ்வு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

"உங்கள் குருதி அழுத்தத்தை குருதி அமுக்கத்தை சரியாக அளவு செய்து உயர் குருதி அமுக்கத்தை கட்டுப்படுத்தி நீண்ட நாள் வாழுங்கள்" எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீனின் பணிப்புரையில் சர்வதேச குருதி அழுத்த தினத்தையொட்டி சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் பரிசோதனை நிகழ்வு இடம்பெற்றது.

எமது சமூகத்தில் இளையவர் முதியவர் என்ற பாகுபாடு இன்றி பல தீங்குகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன இதில் பிரதானமாக மாரடைப்பு பக்கவாதம் மூளையினுள் குருதிக் குழாய்களில் ஏற்படும் வெடிப்பு சிறுநீரக செயலிழப்பு போன்றவற்றை குறிப்பிட முடியும்.

இவற்றினால் குறிப்பிட்ட நபருக்கும் அவரது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்புக்கள் ஏற்படுகின்றன.

எனவே எமது உடலில் குருதி அமுக்கத்தினை அடிக்கடி செக் பண்ணிக் கொள்வதுடன் உயர் குருதி அமுக்கமுள்ளவர்கள் அதற்கான சிகிச்சையினை தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டும்.

உங்களது குருதி அமுக்கம் சாதாரண நிலைக்கு வந்துவிட்டது இனிமேல் மருந்து மாத்திரைகள் எதனையும் நீங்கள் பயன்படுத்த தேவையில்லை என்ற வைத்திய ஆலோசனை உங்களுக்கு கூறப்படும் வரை ஒருபோதும் உங்களது மருந்துகளை கைவிட வேண்டாம்.

ஏதோ ஒரு சில காரணங்களுக்காக உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் தங்களது மருந்து மாத்திரைகளை தொடர்ச்சியாமல் உள்ளெடுக்காமல் இருந்துவிட்டு திடீரென நோய்வாய்ப்பட்டு மீள முடியாத சிக்கல்களுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருவதை நாம் எமது கண்கூடாக கண்டு கொண்டிருக்கின்றோம், என்று நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.



# சம்மாந்துறையில் புதிய கல்விப் பணிப்பாளர் கடமையேற்பு

(செயிட் ஆஷிப்)

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.எச்.எம்.ஜாபீர் இன்று வெள்ளிக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த டாக்டர் உமர் மௌலானா கடந்த வெள்ளியன்று (10) காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் எம்.எச்.எம்.ஜாபீர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த நிலையிலேயே இவர் சம்மாந்துறை வலயத்திற்கு கல்விப் பணிப்பாளராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நைறோஸ்கான் தலைமையில் நடைபெற்ற கடமையேற்பு நிகழ்வில் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் உட்பட பிரதி மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிய கல்விப் பணிப்பாளருக்கு வரவேற்பளிக்கப்பட்டதுடன் வாழ்த்துரைகளும் நிகழ்த்தப்பட்டன.






# கல்முனை வைத்தியசாலையில் நினைவுக்கல் திறந்துவைப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் வரலாற்று நினைவுக்கல் திறப்பு விழா நேற்று முன்தினம் (15) சிறப்புற நடைபெற்றது.

வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் ஏபிஆர்எஸ்.சந்திரசேன தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு இவ்வைத்தியசாலையின் பணிப்பாளராக இருந்து பதவிஉயர்வு பெற்றுச் சென்ற வைத்திய கலாநிதி டொக்டர் ஆர். முரளீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார் .

வரலாற்று நினைவுக்கல் அமைப்பதற்கான அனுசரணையை கல்முனை வர்த்தகர் கே.பிரகலதன் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவருக்கு பிரதம அதிதி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# கிரிக்கெட் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்தும் யாழ்ப்பாணத்தின் மூளாய் விக்டரி கிரிக்கெட் கழகம்!



பதிவு -
மைந்தன் சிவா

வியாஸ்காந்த் விதூசன் அபினாஷ் என்று தேசிய-சூப்பர் லீக்கில் விளையாடும் பலரை பார்த்துவிட்டோம்.

ஆனால், இது மகளிர் கிரிக்கெட் !!

23 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தேசிய-சூப்பர் லீக் ரி-20 கிரிக்கட் போட்டிகள் இடம்பெற்றுவருகின்றன. அதில் நேற்று முந்தைய தினம் கொழும்பு அணிக்கெதிராக கண்டி அணி மோதியிருந்தது.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பாடிய கொழும்பு அணி, இருபது ஓவர்களில் இரண்டு விக்கட்டுகளை மட்டும் இழந்து 152 ஓட்டங்களைக் குவிக்க, கண்டி அணி 91 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தோல்வியடைந்தது.

கொழும்பு அணியினர் இழந்த இரண்டு விக்கட்டுகளையும் யாழ் இளம் வீராங்கனை ஒருவர் தான் கைப்பற்றியிருந்தார் - அவர் தான் தேவகி ஜெகனாதன்!

இவர் கடந்த நவம்பரில் றுழஅநளை யேவழையெட Major Club Tournament இல் பிஆர்சி லேடீஸ் அணிக்கெதிரான போட்டியில் பதுரெலிய சிசி அணியின் சார்பாக ஒன்பது ஓவர்கள் பந்துவீசி வெறும் நான்கு ஓட்டங்களை மட்டும் கொடுத்து ஐந்து விக்கட்டுகளை கைப்பற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.






குறித்த போட்டியில் அவர் வீசிய 54 பந்துகளில் 50 பந்துகள் ஓட்டங்களை விட்டுக்கொடுக்காதவை என்பது கவனிக்கத்தக்கது! இவர் ஒரு Left-arm orthodox ரக பந்துவீச்சாளர்!

நிற்க.

குறித்த பெண் வீராங்கனை மகாஜனா கல்லூரியில் பயின்றிருந்தாலும், அந்தப் பாடசாலையில் கடின பந்து மகளிர் கிரிக்கெட் இல்லை. அப்புறம் எப்படி இவர் இந்தளவு தூரம் வந்தார்? (மேலதிக இணைப்பு : மகஜனாவிலும் கடினப்பந்து அணி இல்லாவிட்டாலும் கூட, கடினப்பந்து பயிற்சி இவருக்கு வழங்கப்பட்டதாக தெரிகிறது)

இதைத் தேட ஆரம்பித்தபோதுதான் மூளாய் விக்டரி கிரிக்கெட் கழகம் (மூளாய், யாழ்ப்பாணம்)

என்கின்ற மகளிர் கிரிக்கெட் கழகம் பற்றித் தெரியவந்தது!

அதன் சிறப்பு என்னவென்று கேட்கிறீர்களா?

இந்த விளையாட்டுக் கழகம் ஒன்று தான், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்திருக்கும் ஒரே ஒரு மகளிர் கிரிக்கெட் கழகம், மகளிர் கிரிக்கெட் அணி..!

அது எப்படியென்றால், இந்த அணியை விட்டால், அங்காலே போய் கிரிக்கெட் விளையாடவேண்டுமென ஒரு வடக்கு இளம் வீராங்கனை நினைத்தால் அவர் குருணாகலை அல்லது பொலனறுவை சென்று தான் அங்கிருக்கும் கழகங்களுக்கு விளையாடவேண்டும்..!

இம்முறை நாட்டை நான்காக பிரித்து இடம்பெறும் தேசிய பிரதான கழகங்களுக்கிடையிலான தொடரில், இந்தக் க்ளப்பிலிருந்து இருவர் விளையாடுகிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

ஒருவர் தேவகி. ஸ்கூல் கிரிக்கெட் விளையாடாத இவரின் திறமையை கண்டறிந்து, அவர் தெல்லிப்பழை என்றாலும் கூட கூட்டியந்து அணியில் சேர்த்து தேசிய அளவில் போட்டியிடும் வீராங்கனையாக மாற்றி அனுப்பியிருக்கிறார்கள் இக்கழகத்தினர்.

இன்னொருவர் பொலனறுவையைச் சேர்ந்த சிங்கள வீராங்கனை மலீஷா! அவருக்கு பொலனறுவையில் இடம் கிடைக்கவில்லை. அங்கிருத்னு யாழ்ப்பாணம் வந்து மூளாய் விக்டரி அணியில் இணைந்து பயின்று, பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு அதன்மூலம் இப்போது

தேசிய பிரதான கழகங்களுக்கிடையிலான தொடரில் விளையாடுகிறார்..!

இந்த கிரிக்கெட் அணியின் பெறுமதி புரிகிறதா?

எட்டு வருடம் முன்பாக ஒரு பக்க செவிப்புலன் அற்ற ரஜிதா என்கின்ற பெண்ணை அடையாளம்கண்டு அவரை தேசிய வளர்முக குழாம் வரை அனுப்பி சாதனை படைத்திருக்கிறார்கள். பின் பல்வேறு காரணங்களால் அவரால் தொடரமுடியாமல் போய்விட்டது.

இப்போது இந்த அணியிலிருந்து ஐந்து ஆறு வீராங்கனைகள் மகளிர் டிவிசன் -1 என்கின்ற முதல் தர கிரிக்கெட் ஆடும் திறமையானவர்கள்.

ஆனால் பரிதாபம்,

இத்தனைக்கும் இக்கழகம் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டினால் பதிவுசெய்யப்படவில்லை! அதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறார்கள் கழகத்தினர்.

தேசிய ரீதியில் வழமை போல் இடம்பெறும் தமிழ் வீரர்களுக்கான புறக்கணிப்புகள், பொறாமைகள் தாண்டி சாதிப்பது மிகவும் சவாலாக இருக்கிறது என்கிறார்கள் விடயம் தெரிந்தோர். புறக்கணிப்புகள் இன்னமும் தொடர்கின்றன.

ஆண்கள் கிரிக்கெட் இற்கு தமிழ் வீரர்களை



இணைக்க இருக்கும் ஓரளவு அழுத்தம் கூட மகளிர் கிரிகெட் பக்கம் துப்பரவாக இல்லை என்பதுதான் யதார்த்தம்.!

மன்னாரில் ஒரு இளம் வீராங்கனை இம்முறை தேசிய 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியில் விளையாடியிருக்க வேண்டும். அவரின் பந்துவீச்சு வேகம் ஏனையோரைவிட அதிகம் என்கிறார்கள். ஆனால் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அண்மையில் இவர்களின் திறமையை கேள்விப்பட்டு விஜயம் செய்த இலங்கை மகளிர் கிரிக்கெட் நிர்வாகியும் முன்னாள் வீரர் ஹஸன் திலகரத்னவின் மனைவியுமான அப்சரி திலகரத்ன, மூளாய் விக்டரி கழகத்தை பதிய நடவடிக்கை எடுப்பதற்கும், கழக மட்டப் போட்டிகளில் பங்குபற்ற வாய்ப்பு கொடுப்பதற்கும் உறுதிமொழி வழங்கியிருக்கிறார்.

கூடவே, குறித்த அணியின் உரிமையை வாங்க பல்வேறு தரப்புகள் முண்டியடிக்கின்றன. இல்லாவிட்டால் வெளி மாவட்டங்களுக்கு விளையாடச்செல்லும் போது வீராங்கனைகளின் திறமைகளை பார்த்துவிட்டு, தங்கள் கழகங்களில் விளையாட வைக்க தனிப்பட்ட அளவில் முயற்சிகளும் இடம்பெறுகின்றன.

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கண்டியில் கடும் மழை வெள்ளத்தில் மூழ்கிய புகையிரத நிலையம்



(எம்.எம்.ஜெஸ்மின்)

கண்டி நகரில் பெய்த கடும் மழையினால், கண்டி புகையிரத நிலையம் உள்ளிட்ட நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கின.

சட்டவிரோத கட்டிட நிர்மாணங்கள் மற்றும் முறையற்ற வடிகால் அமைப்பே இத்திடீர் வெள்ளத்திற்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

புகையிரத நிலையத்தை அண்மித்துள்ள முறையற்ற வடிகால் கட்டமைப்பு மற்றும் வடிகால்கள் மூடப்பட்டமையே, புகையிரத நிலையம் நீரில் மூழ்க காரணம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கண்டி நகரில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி ஒரே நேரத்தில் பெய்துள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இதையடுத்து, போகம்பரவிற்கு பின்புறமாகவுள்ள மலைப் பகுதியிலிருந்து பெருமளவான வெள்ளநீர், புகையிரத நிலையத்தை நோக்கி பெருக்கெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 36 வருட கல்விச் சேவையிலிருந்து ஆசிரிய ஆலோசகர் மன்சூர் ஓய்வு

(காரைதீவுச் செய்தியாளர்)



சம்மாந்துறை வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் இசட்.எம்.மன்சூர் தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறுவதையிட்டு வலயக்கல்விப் பணிமனையில் பிரிவுபசாரநிகழ்வு நேற்று (16) வியாழக்கிழமை இடம்பெற்றது.

சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி. சகாதேவராஜா தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது

சம்மாந்துறை வலய நிருவாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்வை. யாசீர் அரபாத் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, எச்.நைஷரூஸ்கான், பி.பரமதயாளன் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

ஓய்வுபெறும் ஆசிரியஆலோசகர் மன்சூர் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலய கணினி நிலையப் பொறுப்பதிகாரி ஜலீல், உதவிக்கல்விப்பணிப்பாளர் எம் எம் எம். ஜௌபர் ஆகியோர் உரையாற்றினர். ஆசிரிய ஆலோசகர் றிஸ்வி கவிதையாற்றி வாசித்தார்.

மன்சூரின் அர்ப்பணிப்பான சேவையைப்பாராட்டி பணிப்பாளர் அரபாத் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார்.

11 வருட காலம் ஆசிரியர் பணியும் 25 வருட காலம் ஆசிரியர் ஆலோசகர் பணியையும் நிறைவு செய்து ஓய்வு பெறும் இஸட்.எம். மன்சூர் கவிஞருமாவார்.

ஆசிரிய ஆலோசகர் மன்சூர் ஏற்புரை நிகழ்த்துகையில், தான் 36வருடங்களுக்குமேல் கல்விச்சேவையாற்றியதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருடனும் முரண்படவில்லை எனவும் மாறாக அனைவரும் ஒத்துழைப்பு நல்கியதாகவும் நன்றி கூறினார்.

# கடன் மறுசீரமைப்பின் பின்னர் கடன்களை திருப்பி செலுத்துவது அரசாங்கத்திற்கு கடினமாக இருக்காது

## மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு



கடன் மறுசீரமைப்பின் பின்னர் கடன்களை திருப்பி செலுத்துவது அரசாங்கத்திற்கு கடினமாக இருக்காது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பிற்கு முன்னர் அந்நிய செலாவணி கடன் மொத்த உள்நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2 சதவீதமாக இருந்ததாகவும், கடன் மறுசீரமைப்பிற்கு பின்னர் அந்த அளவினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்தையும் விட குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நீண்ட கால அடிப்படையில் அரசாங்கத்தின் வருடாந்த கடன் பொறுப்பு பாதியாக குறையும் எனவும், அத்தகைய தொகையில் கடனை திரும்பிச் செலுத்துவது அரசாங்கத்திற்கு கடினமாக இருக்காது, இதனால் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தின் கடன்களை செலுத்துவதற்கான திறனை (கடன் நிலைத்தன்மை) உறுதிப்படுத்த முடியும் அது மிக முக்கியமான உத்தரவாதமாக அமையும் எனவும் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-60)

# கிரிக்கெட் வீராங்கனைகளை...

ஆனால், இத்தனை வருடகால உழைப்பு போட்டு இந்த வீராங்கனைகளை உருவாக்கி இந்த நிலைக்கு கொண்டுவந்திருக்கும் மூளாய் விக்டரி கிரிக்கெட் கழகத்தினை ஸ்ரீலங்கா கிரிக்கெட்டில் பதிந்து அங்கீகாரம் தருவதும், அந்த வீராங்கனைகளுக்கு நல்ல எதிர்காலம் அமைத்துக் கொடுப்பதும் தானே சிறப்பான தீர்வாக இருக்கும்?

ஆண்கள் கிரிக்கெட் பெறும் கவனத்தை மகளிர் கிரிக்கெட் பெறுவதில்லை. அவர்கள் தான் ஏராளமான சவால்களை தாண்டவேண்டியிருக்கிறது. வீட்டில், வெளியில், பயிற்சியில், பயணத்தில் என்று பெண்கள் அதிக சவால்களை சந்திக்கின்றனர். இவற்றையெல்லாம் தாண்டி அவர்களுக்கான எதிர்காலத்தை கட்டமைக்கும் இந்த விளையாட்டுக் கழகத்தினருக்கும் நிச்சயம் உதவிகள் செய்யவேண்டியது ஆர்வமிருப்போரின் கடமையும் கூட.

ஒரு வெளி மாகாண போட்டியில் கலந்துகொள்ள, போக்குவரத்திற்கு மட்டும் லட்சத்துக்கு மேல் செலவாகிறது. ஏதோ ஐந்தும் பத்தும் என சேர்த்து தங்கள் கனவிற்கு உரம் போட்டு இதுவரை இழுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் மூளாய் விக்டரி கிரிக்கட் அணியின் நிர்வாகத்தினர்.

இந்த அணியிலிருந்து யாழ் மாவட்ட, வடக்கு மாகாண அணியில் கூட பல வீராங்கனைகள் விளையாடுகிறார்கள்.

சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் டெனிஸ் பந்து கிரிக்கெட்டை ஆரம்பித்து, அந்த அணிகள் தேசிய மட்ட இறுதிவரை சென்றதிலிருந்து, அந்த மாணவிகளை கடினப் பந்துப் பயிற்சிப் பக்கம் திருப்பிவிட்டு அணியினை பூச்சியத்திலிருந்து கட்டமைக்க ஆரம்பித்திருக்கின்றனர்!

இப்படி ஒரு அட்டகாசமான கதையை - பயணத்தை கேள்விப்பட்டபோது பெருத்த ஆச்சரியம்தான் எனக்கு கிடைத்தது. சுய நலன் இல்லாமல் ஒரு மகளிர் கிரிக்கெட் அணியை உருவாக்கி தேசிய அளவில் வீராங்கனைகளை தயார் பண்ணுவது என்பது அனைவராலும் இயலுமான ஒன்றல்ல..!

முடிந்தளவில் இவர்களை பிரபலப்படுத்த முயற்சி செய்யுங்கள். உதவிகள் செய்யுங்கள். நிச்சயம் தேசிய அணிக்கு வீராங்கனைகளையும் எம்மால் அனுப்பமுடியும் என்கின்ற நம்பிக்கை இவர்களுக்கும், எனக்கும் இருக்கிறது.!

**வாழ்த்துகள் தேவகி.**


**வாழ்த்துகள் மூளாய் விக்டரி கிரிக்கெட் கழகம் !**

True champions. Brilliant success story!!



# சாதாரண தர பரீட்சை முடிவடைந்த உடனேயே உயர் தர கற்றல்களை ஆரம்பிக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சு தீர்மானம் மேற்கொண்டது



கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குப் பின்னர் உயர்தர வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதுதொடர்பான அமைச்சரவை பத்திரம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 2024 ஆம் ஆண்டு மே மாதம் சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு, பரீட்சை முடிவடைந்த உடனேயே உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். சாதாரண தர பரீட்சை முடிவடைந்ததும், அது தொடர்பான பெறுபேறுகளை வெளியிட பரீட்சை திணைக்களத்திற்கு குறைந்தது 3 மாதங்கள் தேவைப்படும். இந்த இடைப்பட்ட கால கட்டத்தில் மாணவர்கள் பாடசாலை கல்வியிலிருந்து அந்நியப்படுவது, உயர்தரம் கற்றலுக்கான நாட்டம் குறைவடைவது என பல்வேறு சமூக பிரச்சனைகளை அது உருவாக்கின்றது.

இவற்றை கருத்திற் கொண்டு மாணவர்களின் நேரத்தை திறம்பட முகாமைத்துவப்படுத்தவும், உயர்தர பாடத்திட்டத்திற்கமைய கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள் ஆசிரியர்களுக்கு போதிய அவகாசத்தை வழங்கும் வகையிலும் 2024 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்த உடனேயே, பாடசாலைகளில் உயர்தர கற்றலை தொடங்குவது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ரெம-66)

# இலங்கைச் சிறுமிகளின் ஆபாச புகைப்படங்கள் இணையத்தில் வெளியிடப்படுவது தொடர்பில் அமெரிக்க நிறுவனம் தகவல்

## பொலிஸ் தலைமையக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு விசாரணை




சிறுவர்களின் ஆபாசமான படங்களை உருவாக்கி இணையத்தில் வெளியிட்டுள்ள மோசடியாளர்கள் தொடர்பில் அமெரிக்காவிலுள்ள காணாமல் போன மற்றும் சுரண்டல்களுக்கு ஆளாகும் சிறுவர்களின் நலன் சார்ந்த அமைப்பு வெளியிட்டுள்ள தகவல் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு கொழும்பு மேலதிக நீதவான் கேவிந்த பேரராவிடம் நேற்று முன்தினம் (15) அறிவித்தது.

அமெரிக்க அரசாங்கத்தால் நடத்தப்படும் இந்த நிறுவனத்தினால் மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவின் தலைமை பொலிஸ் பரிசோதகர் சமந்தி ரேணுகா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த அமெரிக்க நிறுவனமானது 181 நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களை மையமாக வைத்து நடத்திய விசாரணையில், சில நபர்கள் இலங்கை சிறுமிகளின் ஆபாசப் படங்களை உருவாக்கி இணையதளத்தில் வெளியிட்டு, அப்படங்களை தம் வசம் வைத்துள்ளதாக அந்நிறுவனம் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவிற்கு தகவல் வழங்கியுள்ளது எனவும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நீதிமன்றத்திடம் குறிப்பிட்டார்.

இதுவரை எத்தனை சிறுமிகளின் இதுபோன்ற ஆபாச படங்களை தயாரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் இன்னமும் கண்டறியப்படவில்லை எனவும், சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர், இந்நிலைக்கு ஆளாகியுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்த புகைப்படங்களை எடுத்த நபர்கள் யார் என்பன பற்றி விரிவான விசாரணை தொடங்கப்படும் எனவும் அந்த முறைப்பாட்டில் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் விடயங்களை பரிசீலித்த நீதவான், இந்த விடயம் குறித்து முறையான விசாரணை நடத்தி உண்மைகளை நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவிற்கு உத்தரவிட்டார்.

(ரெம-67)






## ரி-20 உலகக்கிண்ணத்துக்கு குசல் மெண்டிஸ் பயணிப்பதற்கு வீசா நிராகரிக்கப்பட்டதா?

**கிரிக்கெட் அதிகாரி அஷ்லி டி சில்வா விளக்கம்**



இலங்கை ரி 20 அணியின் உப தலைவர் குசல் மெண்டிஸ், அமெரிக்கா செல்வதற்காக சமர்ப்பித்த வீசா விண்ணப்பம் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா, இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தகவல் தெரிவித்தார்.

அப்போது அவர், குசல் மெண்டிஸின் விசா விண்ணப்பம் நிராகரிக்கப்படவில்லை என்றார்.

இது தொடர்பில் அமெரிக்க தூதரக அதிகாரிகளுடன் இணைந்து குசல் மெண்டிஸ் செயற்பட்டு வருவதாகவும் அஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், அவரிடம் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த ஆவணங்களைக் கொடுத்த பிறகு, அடுத்த ஓரிரு நாட்களில் அவருக்கு விசா கிடைக்கும். எனவே, மெண்டிசுக்குப் பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைக்கும் என நம்புவதாகவும் அஷ்லி டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ரி 20 உலகக் கிண்ணத்தில் இலங்கை பங்கேற்கும் முதல் போட்டி ஜூன் 2 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு எதிராக நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. (04)



## மே 18 தமிழின அழிப்பு நினைவு பிரான்ஸ் சுவசி லு றுவா நகரில்

*பிரான்சு சுவசி லு றுவா நகரில் மே 18 தமிழின அழிப்புக்கு நீதிகோரிய கவனயீர்ப்பு நிகழ்வு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சுவசி லு றுவா பிராங்கோ தமிழ்ச்சங்கத்தினால் 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுடர் ஏற்றப்பட்டு அவணக்கம், மலர்வணக்கம் என்பனவும் இடம்பெற்றன. சுவசி லு றுவா துணைநகரமுதல்வர்–கலாசாரம் – வரலாற்று பாரம்பரியம் பொறுப்பாளர், சுவசி லு றுவா நகரசபைஉறுப்பினர்–படைவீரர் விவகாரங்கள் – நினைவகம் – மனித உரிமைகள்பொறுப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டு சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தியிருந்தனர்.*

*நிறைவாக அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.*


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!